# தூத்துக்குடி மாநகராட்சி
## கூட்டப்பொருள்

2019ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 130.10.2019 | 1) இம்மாநகராட்சிக்குட்பட்ட சிவந்தாகுளம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் அமைந்திருக்கும் ஆயத்த பயிற்சி மையம் மற்றும் பகல் நேர பாதுகாப்பு மையம் ஆகியவற்றில் பயிற்சி பெறும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களை பள்ளிக்கு அழைத்து வர தனியார் வாகனத்தினை பயன்படுத்திக்கொள்ள தெரிவிக்கப்பட்டதின்படி, குறைந்த விலைப்புள்ளி (நாள் ஒன்றுக்கு ரூ. 3200/–) கொடுத்த திரு. பொன்ராஜ் என்பவருக்கு சொந்தமான ராஜா டிராவல்ஸ் வாகனம் TN63AZ8530 மாற்று வாகனம் TN72AA8419னை 09.09.2019 முதல் மாற்றுத் திறனாளி மாணவர்களை சிவந்தாகுளம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு அழைத்து வர அனுமதி வழுங்கவும் மற்றும் மேற்படி செலவினங்களுக்கு மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம். எச்1/3101/19 | 173) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சி– பொது சுகாதாரம்– திடக்கழிவு மேலாண்மை பணிகள் 60 வார்டுகளில் ஏற்கனவே 45 வார்டுகளில் மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் 15 வார்டுகளையும் மாநகராட்சி இலகுரக வாகனங்கள் 38 எண்ணம் மற்றும் தேவையான பணியாளர்கள் 261 பேர்களில் 150 பணியாளர்கள் தனியார் வெளி ஆள்கொணர்வு முறையே 111 பணியாளர்களை இம்மாநகராட்சி நகர்புற வாழ்வாதார மையத்தின் மூலமும் பணியமர்த்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 60 வார்டுகளிலும் சேர்த்து பணிமேற்கொள்ள தேவையான கீழ்க்கண்ட தளவாடச் சாமான்கள் கொள்முதல் செய்ய வேண்டியது அத்தியாவசியமானதாகும். | 174) அலுவலகக் குறப்பு அனுமதிக் கப்பட்டது |

| வ.எண் | தளவாடச் சாமான்கள் விபரம் | தேவையான அளவு | நிதி விபரம் |
|---|---|---|---|
| 1 | மண்வெட்டி | 80 எண்ணம் | |
| 2 | பிக்காஸ் | 80 எண்ணம் | |
| 3 | பைபர் கூடை பெரியது | 80 எண்ணம் | |
| 4 | பைபர் கூடை சிறியது | 80 எண்ணம் | |
| 5 | பெரியமார் (3/4 இரும்பு பைப் & கம்பிகளால்) | 80 எண்ணம் | |
| 6 | ஈக்கிமார் | 160 எண்ணம் | |
| 7 | கைவாரி | 160 எண்ணம் | |
| 8 | கான்கரண்டி | 40 எண்ணம் | |
| 9 | பூவாரியல் | 50 எண்ணம் | |
| 10 | அருவாள் | 10 எண்ணம் | |
| 11 | கழிப்பறை சுத்தம் செய்யும் பிரஸ் | 100 எண்ணம் | |
| 12 | தரை துடைப்பான் (Floor Clearing Mop) | 60 எண்ணம் | |
| | மொத்தம் | 960 | |

| | | |
|---|---|---|
| | மேற்படி தளவாட சாமான்கள் கொள்முதல் செய்வதற்கான செலவினத்தொகை (உத்தேச செலவுத் தொகை ரூ. 2.00 இலட்சம்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்3/2247/18 | |
| | 3) இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மாநகராட்சிக்குட்பட்ட பெரு வணிக பகுதிகளில் உற்பத்தியாகும் உயிர்கழிவுகளை (Sanitary Napkins) முறையாக அப்புறப்படுத்த ஏதுவாக 300 முதல் 400 கிலோ வரையிலான குப்பைகளை கையாளும் திறன் கொண்ட Incinerator இயந்திரங்கள் 4 எண்ணம் ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்வதற்கும் அதற்கான செலவினை (உத்தேச செலவுத் தொகை ரூ. 9 லட்சம்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/2034/2016 | 175) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 4) தூத்துக்குடி மாநகராட்சியில் பணியாற்றும் பகுதி சுகாதார செவிலியர்கள், நகர சுகாதார செவிலியர்கள் ஆகியோர்களுக்கு அரசாணை எண். 236 நிதித்துறை நாள் 01.06.2009 மற்றும் அரசாணை எண். 36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 05.04.2018ன் படி 2018–19ம் வருடத்திற்கான சீருடைப்படி வழங்குவதற்கு நகர சுகாதார செவிலியர்களுக்கு தலா ரூ. 1000/– வீதம் 15 நகர சுகாதார செவிலியர்களுக்கு ரூ.15000/–ம் மற்றும் பகுதி சுகாதார செவிலியர்களுக்கு சீருடைப்படியாக தலா ரூ. 1800/– வீதம் 6 பகுதி சுகாதார செவிலியர்களுக்கு ரூ. 10800/–ம் ஆக மொத்தம் ரூ. 25,800/–னை பகுதி/நகர சுகாதார செவிலியர்களுக்கு வழங்கவும் மேற்படி தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதிக்கலாம் எச்1/1660/17 | 176) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 5) தூத்துக்குடி மாநகராட்சி பாளையங்கோட்டை ரோட்டில் உள்ள அறிஞர் அண்ணா பேருந்து நிலைய (பழைய பேருந்து நிலையம்) கட்டிடம் மிகவும் பழைய கட்டிடமாகவும், மிகவும் குறைந்த பரப்பளவில் உள்ளதால் இதன் அருகிலுள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பணிமனை இடத்தினை ( 1.35 ஏக்கர்) இணைத்து புதிதாக பேருந்து நிலையம் கட்ட உத்தேசிக்கப்பட்டு பழைய பேருந்து நிலையத்தில் 7 பேருந்துகள் (7 Bays) மட்டும் நிறுத்துவதற்கு மட்டுமே வசதிகள் இருந்தன. தற்போது 29 பேருந்துகள் (29 Bays) நிறுத்துவதற்கு வசதிகள் ஏற்படுத்தி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ. 53.40 கோடியில் கட்ட அனுமதி பெறப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது.<br>பார்வை 1இல் கண்ட தேசிய மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் அவர்களின் 12.11.2018ம் தேதிய கடிதத்தில் | 177) அலுவலகக் குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது |

Model Smart Depot ஆக அமைப்பதற்கு ஏதுவாக மாநகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள உழவர் சந்தைக்கு மேற்கு பகுதியிலுள்ள காலி இடத்தில் சுமார் 2.50 ஏக்கர் முதல் 3.00 ஏக்கர் வரையிலான பரப்பளவில் இடம் வழங்கப்பட வேண்டும் எனவும் இவ்விடத்தில் பேருந்து பணிமனைக்கு தேவையான அனைத்து உள்கட்டமைப்பு மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு குறைந்தது ரூ. 450 இலட்சம் மதிப்பிலான புதிதாக அலுவலக கட்டிடம் நவீன இயந்திரம் உபகரணங்கள் மற்றும் அனைத்து வசதிகளுடன் கூடிய பணிமனை மாநகராட்சியால் அமைத்து தர வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பழைய பேருந்து நிலையத்தின் அருகிலுள்ள பணிமனை இடத்தின் சர்வே எண் 4 பிளாக் எண். 19, 21இ, நகரளவு எண். 3467/2சி3எ, 3467/2சி 3பி 2எ, 3362/1 ஆகியவற்றில் உள்ள 1.35 ஏக்கர் இடத்தின் வழிகாட்டி மதிப்பு ரூ 5,87,93,840/– ஆகும். தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திற்கு ஈடாக வழங்க வேண்டிய புதிய பேருந்து நிலைய வளாக இடத்தின் சர்வே வார்டு 4 பிளாக் எண். 32எ, நகரளவு எண். 4128/3 பாகம் ஆகியவற்றில் உள்ள 1.94 ஏக்கர் இடத்தின் வழிகாட்டி மதிப்பு ரூ. 9,76,35,750/– ஆகும்.

மேற்படி இரு வழிகாட்டி மதிப்பின்படி புதிய பேருந்து நிலையத்தின் மதிப்பு வித்தியாசம் ரூ.3,88,41,910/– ஆகும். புதிய பணிமனைக்கான உள்கட்டமைப்பு வசதிகள் உட்பட மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும் கூடுதல் நிதியிழப்பு குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கை மற்றும் மாநில தணிக்கை கணக்காயர் அளவில் தணிக்கைத் தடை எழுப்ப வாய்ப்புள்ளதால் இதனை மீண்டும் வலியுறுத்தி இது குறித்து 13.09.2019 அன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் திருநெல்வேலி மற்றும் டிவிஷனல் மேனேஜர், தூத்துக்குடி ஆகியோர்கள் ஆணையர் மற்றும் செயற் பொறியாளர் (பணிகள்) முன்னிலையில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டது. கூட்ட முடிவில் இம்மாநகராட்சியால் 1.94 ஏக்கர் நிலத்தை புதிய பேருந்து நிலைய வளாகத்தில் வழங்க இருதரப்பிலும் முடிவு எடுக்கப்பட்டது.

சீர்மிகு திட்டத்தில் புதிய பேருந்து நிலையமும் பழைய பேருந்து நிலையமும், நகரை அபிவிருத்தி செய்யவேண்டிய நிலையில் பொதுமக்களுக்கு போக்குவரத்திற்கு இடையூறு இல்லாத சூழ்நிலை ஏற்படுத்தும் வழிவகையில் தமிழ்நாடு அரசு போக்கு வரத்து கழக பணிமனை 1.35 ஏக்கர் இடத்தினை மாநகராட்சிக்கு ஒப்படைக்கவும் அதற்கு ஈடாக புதிய பேருந்து நிலையத்தின் அருகில் சர்வே வார்டு எண். 4 பிளாட் 32 எ நகரளவு எண். 4128/3 பாகம் ஆகியவற்றில் 1.94 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திற்கு வழங்க நிலபரிவர்த்தனை செய்வதற்கு அரசின் அனுமதி பெற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் வழியாக முன்மொழிவு சமர்ப்பிப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மாமன்ற அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.இ1/3209/2015– (Bus Ter)

| | | |
|---|---|---|
| | 6) இம்மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட சத்திரம் தெரு பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா திருமண மண்டபம் செயல்பட்டு வருகிறது. இம் மண்டபம் 2007ம் ஆண்டு கட்டப்பட்டதாகும். மண்டபம் கட்டப்பட்டு 12 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டபடியால், மேற்படி மண்டபத்தின் ஜன்னல்கள், கதவுகள் சிமெண்ட் பூச்சுகள், காம்பவுண்ட் சுவர், காக்கிரிட் ஸ்லாப், மற்றும் மின் இணைப்புகள் பழுதடைந்துள்ளன. மேலும் முன்புற பேவர் பிளாக் ஸ்லாப்கள் ஆங்காங்கே பழுதுபட்ட நிலையில் உள்ளது. எனவே, மேற்படி மண்டபத்தினை பழுது நீக்கம் செய்து., சுவர்களில் வர்ணங்கள் பூசி பொதுக்களின் பயன்பாட்டிற்கு நல்ல முறையில் கொண்டு வந்து மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் மேற்படி திருமண மண்டபத்தின் மராமத்து பணியினை ரூ 22.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | 178) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |
| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (இலட்சத்தில்)** |
| | கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட சத்திரம் தெரு அறிஞர் அண்ணா மாநகராட்சி திருமண மண்டபத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணி | 22.50 |
| | மொத்தம் | 22.50 |
| | எனவே, பொதுமக்களின் பயன்பாட்டிற்கும், மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையிலும் மேற்படி திருமண மண்டபத்தில் மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணியினை மதிப்பீட்டு தொகை ரூ. 22.50 /– இலட்சத்தில் பொது நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் மூலம் வரப்பெற்ற வளர்ச்சி கட்டண நிதியின் மூலம் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2) மாநகராட்சி பொது நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவின் வரன்முறைப்படுத்துதல் வளர்ச்சி கட்டண நிதி மூலம் ஈடு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ2/02908/2019 | |
| | 7) இம்மாநகராட்சிக்கு எதிராக பல்வேறு காரணங்களுக்காக உயர்நீதிமன்றங்களில் பொதுமக்கள் வழக்கு தாக்கல் செய்து வருகின்றனர். அவ்வாறு தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் ஒரு சில வழக்குகள் ஒரே வகையான காரணத்திற்காக தனித்தனி நபர்களால் தாக்கல் செய்யப்படுகிறது. இவ்வாறு தாக்கல் செய்யப்படும் வழக்குகளுக்கு வழக்கறிஞர் மூலம் கட்டணம் தனித்தனி வழக்குகள் என குறிப்பிட்டு வழக்கு கட்டணம் கோரப்படுகிறது.<br>இதனை பரிசீலனை செய்யும் போது ஒரே வகையான வழக்குகளுக்கு வழக்கு கட்டண செலவினங்கள் குறைவாக ஏற்பட வாய்ப்பு உள்ளதால், முதன்முதலாக தொடரப்படும் வழக்குக்கு ரூ. 7000/– என்ற அடிப்படையில் கட்டணம் நிர்ணயம் செய்து தொடர்ச்சியாக அடுத்தடுத்து வரும் ஒரே வகையான வழக்குகளுக்கு கட்டணம் நிர்ணயம் செய்யவும், மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். சி1/7147/2007 | 179)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 8) இம்மாநகராட்சியில் ஒய்வுபெற்ற பாதுகாப்பு படை வீரர்களை (TEXCO) கொண்டு மாநகராட்சி மைய அலுவலகம் மண்டல அலுவலகங்கள் மற்றும் பூங்காக்களில் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி பணிக்கான ஊதியம் சம்பந்தப்பட்ட டெக்ஸ்க்கோ நிறுவனத்திற்கு 12 சதவீத சேவை வரி மற்றும் 18 சதவீத ஜி.எஸ்.டி. கட்டணத்துடன் சராசரியாக 1 நபருக்கு 30,000/– வீதம் 12 பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. இதனால் பாதுகாப்பு பணிக்கான செலவினம் மிகவும் மிகையாக இருந்து வந்த நிலையில், தற்போது மாநகராட்சி மைய அலுவலகம், மண்டல அலுவலகங்கள் மாநகராட்சி பராமரிப்பில் உள்ள பூங்காக்கள் மற்றும் இதர கட்டிடங்களில் பாதுகாப்பு பணியினை மாநகராட்சியே ஏற்று நடத்திடும் வகையில் மாநகராட்சியில் பாதுகாப்பு பிரிவு (Corporation Security Wind) புதிதாக தோற்றுவித்திட உத்தேசிக்கப்பட்டது.<br>அதன்படி பாதுகாப்பு பிரிவு தோற்றுவித்திட முதல்கட்டமாக 20 பாதுகாப்பு பணியாளர்களுக்கு தேவையான சீருடை (பெல்ட், பேட்ஜ், ஊதழ், டார்ச்லைட், தொப்பி ) காலனி மற்றும் சீருடை தையற்கூலி உள்பட வழங்க தோராயமாக ரூ. 1,00,000/– செலவாகும். மேற்படி செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2) ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று முன்பணத்தொகை வழங்கப்பட்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>எச்1/2926/19 | 180) அலுவலக குறிப்பு 1 அனுமதிக் கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக் கப்பட்டது. |
| | 9) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளிலும் உள்ள தெருவிளக்குகள் இயக்கி பராமரிக்கும் பணிகளை கண்காணித்தல், இதர தெருவிளக்குகள் சம்பந்தமான பணிகள் அனைத்து மாநகராட்சி கட்டடங்களில் மின் பராமரிப்பு பணிகள் செய்தல் மற்றும் மின் வாரியம் சம்பந்தமான பணிகளை கண்காணித்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கும் பணிகளை கவனிக்க இரண்டு மின் பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். இதனால் ஆணையர் அவர்களால் தெரிவிக்கப்படும் பணிகளை உடனுக்குடன் செய்து முடிப்பதில் அதிக சிரமங்கள் ஏற்பட்டு வருகிறது.<br>மேலும் தற்போது அரசின் **SMART CITY MISSION** திட்டப் பணிகள் அதிகளவில் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் ஏற்கனவே உள்ள இரண்டு களப் பணியாளர்களை மட்டும் வைத்து முழு அளவில் பணிகளை விரைவுபடுத்த இயலாத சூழலும் எழுகிறது. இதனைத் தொடர்ந்து மாதாந்திர மின் கட்டணங்களை கணனியில் பதிவு செய்து சரிபார்க்க பணியாளர் இல்லாததாலும் நிர்வாக நலன் கருதி இரண்டு பணியாளர்களை நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் (City Live hood Center) District Collector approved rate தினசரி ஊதியம் அடிப்படையில் 05.10.2018 முதல் ஓர் ஆண்டிற்கு தற்காலிக அடிப்படையில் மாமன்றத் தீர்மான எண். 218 நாள் 11.12.2018 ஒப்புதலின் படி ஏற்கனவே பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு | 181) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | வரப்படுகிறது.<br>1. தொழில்நுட்ப பணியாளர் (மின்னியல் பட்டயம் பெற்றவர்) 1 எண்ணம்<br>(Technical Assistant)<br>2. கணினி ஆப்ரேட்டர் (Computer Operator)<br>இந்நிலையில் மேற்படி அத்தியாவசியப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியதின் அவசியம் கருதி 05.10.2019 முதல் அடுத்த ஓர் ஆண்டு காலத்திற்கு மேற்படி பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2017–18 மற்றும் 2018–19ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி சம்பளத்தில் நகர்புற வாழ்வாதார மையம் மூலம் பயன்படுத்திக்கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 3.32 லட்சத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1)மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br>2)ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்ததற்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண். 3654/2018/இ5) | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.10.10.2019

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி